# THE MORNING STAR.

**Vol. 61. Jaffna, Thursday 21st of March. 1901. No. 6.**

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.

## OUR SUBSCRIBERS.
Please remit your Subscriptions for Star at once.

THE CEYLON STEAMSHIP Co. Ltd.



The Lady Gordon and Lady Havelock are appointed to sail from Mandative and Kangesanturai for Colombo on the undermentioned dates:—

Via Paumban.

Lady Havelock, from Mandative on 13th March
" " Kangesanturai 26th "

Via Point Pedro.

Lady Gordon from Mandative on 18th March
" " Kangesanturai 30th "

W. MATHER & SON, Agents

## NOTICE.

Our store has been admitted by all our Constituents to be the best in Jaffna for
**Fresh and Genuine Articles**
We do not care to stock cheap or old Oilman-stores and thereby bring discredit to our Firm although many in Jaffna wish for such articles.
We receive fresh supplies by every Steamer.
**N.B. Cheap articles can never be good.**

Alexander Brothers & Co.
JAFFNA.

## USEFUL BOOKS.

GENERAL LETTER WRITER (FOURTH EDITION)—Containing 555 letters. Useful to every man in every rank and position of life for daily use. Re. 1. post 1 anna.

HELPS TO THE STUDY OF ENGLISH (THIRD EDITION)—Contents: Phrases, Idioms, Proverbs, &c., with their explanations and proper uses Re. 1, postage 1 anna.

Every-Day doubts and Difficulties (in reading, speaking and writing the English Language.) Re. 1 post 1 anna.

A HAND-BOOK OF ENGLISH SYNONYMS,—Explained with illustrative sentences. Aids to the right use of *synonimous* words in composition, 9 annas, postage 1 anna.

A COMPANION TO ENGLISH GRAMMAR AND COMPOSITION:—Very useful to the Entrance candidates 8 annas, postage 1 anna.

Select Speeches of the Great Orators:—Vols. I & II. These books help to write idiomatic English, improve the oratorical and argumentative powers, &c. Each Volume Rs 2, postage 1½ anna

Solutions of 642 very important Examples in ARITHMETIC, ALGEBRA AND GEOMETRY. For Entrance and Preparatory Classes Rs. 1 8. postage 1 anna.

Solutions of over 300 typical Examples in TRIGONOMETRY. For F. A. students. Re. 1, postage 1 anna.

By V. P. Post 2 annas extra To be had of (Messrs. Rose, Banerji & Co., 40, Sukea's Street, Harri Road), son Calcutta.

## NOTICE.

Wanted Sub-Agents in the principal stations in Jaffna to retail Grey Shirtings, Umbrellas, paper &c.

For terms apply by letter to
S. K. LAWTON.
Agent Messrs. Tarrant Henderson & Co.
Main Street, Jaffna.

## ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction | No. 1135.

In the matter of the estate of the late Muttuchami Tillainather of Puttur Deceased.

Theivanaipillai widow of Tillainather of Chirupitty, Petitioner,

1 Chittampalam Muttuchami and wife
2 Parupathi illai of Puttur. Respondents.

This matter of the Petition of Theivanaipillai widow of Tillainather of Chirupitty praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Muttuchami Tillainather of Puttoor coming on for disposal before W. R. B. Sanders Esquire District Judge, on the 4th day of March 1301 in the presence of Mr. Tambiah S. Cooke, Proctor on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 1st day of March 1901 having been read, it is declared that the Petitioner is the lawful widow of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said intestate issued to her unless the respondents or any other person shall on or, before the 11th day of April 1901 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed the 4th day of March 1901. W. R. B. SANDERS. District Judge.

## ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction | No. 1132.

In the matter of the estate of the late Kunchachipillai wife of Nakappar Murugasoe of Delft East. Deceased.

Nakainterar Tanukkodi of Delft East, Petitioner

1. Pasupati Ramanathan his wife
2. Amerthavallipillai of Delft East and
3. Nakapper Murugasoe of do. Respondents

This matter of the Petition of Nakainterar Tanukkodi of Delft East praying for letters of administration to the estate of the abovenamed deceased Kunchachipillai wife of Nakapper Murugasoe of Delft East coming on for disposal before W. R. B. Sanders Esquire District Judge, on the 22nd day of February, 1901 in the presence of Mr. T. C Changarapillai, Proctor on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 19th day of February 1901 having been read, it is declared that the Petitioner is the next of kin of the said intestate and as such is entitled to have letters of administration to the estate of the said Intestate issed to him unless the Respondent or any other person shall on or, before the 29th day of April 1901 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 22nd day of Feb. 1901 W. R. B. SANDERS. District Judge.

## ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction No.1134.

In the matter of the Estate of the late Chinnachchi wife of Chinnatamby Vaitilingam of Batticotta west. Deceased

Chinnatamby Vaitilingam of Batticotta west. Petitioner

1 Katiraveloe Chinnappoe of Batticottai.
2 Katiraveloe Kantappoe of do.
3 Kurunati Elluppulai his wife
4 Ponnu of do.
5 Katiravaloe Thurai of do. Respondent.

This matter of the Petition of Chinnatamby Vaitilingam of Batticotta west praying for letters of administration to the estate of the abovenamed deceased Chinnachchi wife of Chinnatamby Vaitilingam of Batticotta west coning on for disposal before W.R.B. Sanders Esquire, District Judge on the 4th day of March 1901 in the presence of Mr. T.C. Changarapillai Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 1st day of March 1901 naving been read, it is declared that the Petitioner is the widower of the said intestate and as such is entitled to have letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondent or any other person shall on or before the 15th day of April 1901 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 4th day of March, 1901 W. R. B. SANDERS. District Judge.

## Local & General.

**Weather.** We have had strange weather for March. Last week there were a few hard showers and it reminded one very much of the rainy season. Some damage has been done to the crops of dry grain &c. The sun is very hot in the middle of the day, but the wind still keeps up from the north.

**Central College.** Mr. W. R. Cooke is coming out from England as a Science Master for this institution. He expects to reach Jaffna in May. We congratulate the College on its good fortune.

**Missionary.** Miss A. Stephenson of the Wesleyan mission has left Jaffna for the home land for a period of well earned rest. She expects to return next year. We wish her *bon voyage*. Miss Case of the C. M. S. is expected back soon. She will be accompanied by a friend who takes up mission work.

Dr. Slaughter who has been visiting her friend Dr. A. Young of Inuvil left last week for America. She travels via China and Japan. Rev H. Horsley and family, and Rev. and Mrs. T. Elmer left yesterday for India to be absent six weeks. Mr. Hitchcock and family leave for Kodaikanal early next week for their holidays.

**Union College.** The Misses Leitch are agitating the question of a Union College for the three missions. This question was considered by the heads of the missions a year or two ago, and some agreement reached. In bringing it before the Directors of Jaffna College however much opposition was aroused and so nothing further was done. It does seem as if Jaffna was too small to have three Protestant Colleges. If there could be a Union College for the three missions situated in a central place it would seem wise economy of money and force.

**Old Coins.** Mrs. Allagakoen widow of the late Advocate Allagakoen of Jaffna has a large number of old Tamil copper coins for sale, and will be glad to dispose of them at Re. 1 per dozen. Those wishing to get these coins will do well to apply at once before they are all sold.

**Auxiliary Bible Society.** The semi-annual meeting of this society is to be held at Batticotta on Tuesday the 26th inst. Papers will be read on the subjects for the moonlight meetings for the current year.

**Ceylon Contingent.** The Ceylon Contingent are expected back from South Africa by the middle of April The Duke of Cornwall and York will present medals to several of them on the occasion of his visit to Ceylon.

**A New Star.** A new star was discovered in Perseus last month which for a time was the brightest star in the northern sky. Astronomers are not sure how to account for its great and sudden brilliancy. It will probably decrease in brilliancy and finally become visible only through a telescope. As seen at Batticotta in appears now to be a star of the fourth or fifth magnitude and has a reddish color.

**Bombay.** The census of Bombay shows a falling off of no less than 50000 mainly due to the plague. In districts where famine has prevailed there has been a large decrease also in the population.

THE S. P. G. TAMIL MISSION, TAIPING, PERAK.

Sir,

A brief account of the above Tamil Mission work in this part of the Malayan peninsula will not be uninteresting to your readers.

A decade of years ago there was very little likelihood of the establishment of a Tamil church in Taiping. Time went on and the magic hand of Providence worked its way The then christians of Taiping though barely about 20, yet fervent in th[illegible] spirit, struggled hard to obtain the services of a [illegible] Missionary to watch ov[illegible] to bring a church into existence.

Sometime in 1894 by their earnest request the Chaplain of the English church here through the kind offices and generosity of the Lord Bishop of Singapore, Sarawak &c., secured the services of a catechist in the person of Mr. A. Gnanamani then a graduate of the Theological College, Sullivan's Garden, Madras; his stipend being borne by the Home Society.

Within the expiry of two short years the Native church has attained a remarkably high position. The number of souls increased to 150. Jaffnese 40, and 110 Indians Mr. Gnanamani was ordained Deacon in the Cathedral at Singapore in 1896 and Priested in "All Saints" Church, Taiping, in 1900.

Hitherto the Tamil christian congregation has been without a separate place of worship of their own and a parsonage for their missionary who until now had to rent out a house at the expense of the congregation. By the kind permission of the Lord Bishop of the Diocese they were allowed to use the English church for Divine services on Sundays. However the need of a separate church was keenly felt and this desire became intense as time rolled on and the members increased.

Having struggled for sometime past against heavy odds the Mission has at last succeeded in reaping the first fruit of its labours in the completion of the parsonage for the Tamil Missionary at a cost of $1000 almost purely contributed by the members of the Tamil congregation.

On the 16th Feb. 1901 the Lord Bishop opened the Parsonage for occupation in the presence of Rev. F. S. Pyemont the English Church Chaplain, Mr. E. S. Hose, Church Warden, and a very fair and respectable assembly of Tamil Christians and non christians of the place. The opening ceremony was preceded by the reading of a selected portion of scripture, followed by the singing of a hymn most appropriate to the occasion to the accompaniment of an accordian. Prayer was offered by the venerable prelate. He then declared the parsonage opened. After being approached with the needs that are in the way to the establishment of the church and the intention of the congregation regarding the utilization of the Parsonage, His Lordship expressed himself much gratified with the public spirited liberality of the Tamil christians in having supported the mission so heartily from their small average ability and promised to direct his influence towards the accomplishment of a much cherished and longed for desire amongst them to possess a church of their own. He has very kindly promised to interest himself on behalf of the Mission during his approaching visit to England. Above all he laid much stress upon the fact that the christians consider that the work of evangelizing and preaching the Gospel is not theirs but that of Ministers and teachers and said it is the bounden duty of every christian both young and old men and women to lead a simple and pious life so as to be the cynosure of the circle around them. He inspected the building and was much gratified with the ample accommodation provided. The parsonage will be utilized as a school for the Tamil christian children and a place of worship for the present.

At the conclusion of the opening and dedication ceremony and after usual benediction by the prelate, rosewater was sprinkled and betel leaf and nut was served after the Tamil custom at such gatherings.

Much credit is due to the Members of the Church Council (Messrs. M. A. C. Row (Hon. Treasurer) Chas. T. Daniel, (Hon. Secretary) E. A. Clough, A. V. Ponniah and J. V. Velupillai) who have ably and markedly supported the Tamil missionary in all matters connected with the Church and in his indefatigable efforts to establish a native christian church and parsonage. He has laboured unceasingly for the furtherance of the good work and the congregation have hitherto responded very liberally and heartily to his calls. We wish the Reverend Gentleman and his flock every success, and with such powerful friends as His Lordship the Bishop and others at their back that success may in due course be well taken as almost assured.

The following day His Lordship held the confirmation service and confirmed 4 Tamil christians.

I am etc.
C. T. D.

Taiping, 2nd March 1901.

உதயதாரகை.

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

௬௧ம் புத்தகம்.] யாழ்ப்பாணம், ௧௯௦௧ம் ௵ பங்குனி ௴ ௨௧௨ வியாழக்கிழமை. [சங்கியை, ௯

## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனியாரின்

"லேடிஅவலக்" "லேடி கோடன்" என்னும்



கப்பல்கள் மண்டைதீவு காங்கேசன்றுறை ஆதிய இடங்களிலிருந்து கொழும்புக்குப் போகவிருக்கின்றன.

| | |
|---|---|
| அவலக் காங்கேசன்றுறையிலிருந்துபாம்பன்வழியாக | 1901 பங்குனி 26 உ |
| கோடன்காங்கேசன்றுறையிலிருந்து பருத்தித்துறைவழியாக | " " 30 |

W M MATHER & SON. Agents.

---

BRILLIANTS.—வைரங்கள்,

இங்கிலிஷ் கமலங்கள், கடுக்கன்சோடிக்கேற்ற சத்தமானவைகள், கட்டிய கடுக்கன்கள், சிவப்புக் கடுக்கன், பட்டைச்சிவப்பு, உயர்ந்த புஷ்பராகங்கள், வேண்டுவோர் யாழ்ப்பாணம் காவலர்வீட்டில் வாட் அன் டேவி மருந்துச்சாலையிலே பெற்றுக்கொள்ளலாம்.

புதிய மருந்துகள்,

மேகரோகம், மேகவாதம், மேகச்சூடு முதலியவைகளுக்குக் கைகண்ட சஞ்சீவி நன்னாரி ரசாயனம், போத்தல் ரூ. 4. 00

பெண்களுக்கு நீட்டிக்காலத்தில் உண்டாகும் [illegible]க்குறைக்குக் கைகண்ட [illegible] சயமான கர்ப்பரசாயனம் ரூ. 2. 00

சுரசங்காரி—இது யாழ்ப்பாணமுழுதும்பேர்போன காய்ச்சல்மருந்து. காய்ச்சலை முதியாது மாற்றும். ரூ. 1. 50

இன்னும் எவ்விதநோய்க்கும் பார்த்து நல்ல மருந்துகள் கொடுக்கப்படும்.

வாட் அன் டேவி.
யாழ்ப்பாணம்.

---

விளம்பரம்.

இத்தால் சகலருமறிக: தில்லையம்பலம் ஐயம்பிள்ளை மகள் சின்னத்தங்கமும், ஐயம்பிள்ளையின் பிள்ளைகளாகிய முத்தையாபிள்ளையும், இராசகாரியருமாகிய நாங்கள் யாழ்ப்பாணம் பிரசித்தநொத்தாரிஸ், சனம் தர்கிய இ. இ. சங்கரப்பிள்ளை யவர்கள் முகதாவில் சகரும் இலக்கத்திலும், நவரெலிப்பிரசித்தநொத்தாரிஸ் எட்டுவின்சில்மன்முகதாவில் ககஎ ம்இலக்கத்திலும், சண்டிருப்பாய் திருவினங்கர் யேக்கப் சின்னத்தம்புவுக்கு எழுதிக்கொடுத்த தத்துவத்தை அவர் கேள்விப்படி சகல கணக்குகளையும்பார்த்து, தீர்த்து, அதன்பேரால் அவரிடமிருந்து, எங்களுக்கு யாதொரு கொடுக்கல், வாங்கல், கணக்கு, வழக்கு, உரித்து, உடந்தை, கேள்வி இல்லையென்று வெளியரங்கப்படுத்தி நீக்கினதை யித்தாலறிவிக்கிறோம்.

குறித்த சின்னத்தம்புவாகிய நானும், மேற்சொல்லியவைகளை யேற்று, சகல கணக்குகளையும் தீர்த்து, அத்தத்துவத்தை வேண்டாமென்று அழித்துத் தள்ளிவிடுகிறேனென்பதை யித்தால் வெளியரங்கப்படுத்துகிறேன்.

இங்ஙனம்,

1. சின்னத்தங்கம்
2. அ. முத்தையாபிள்ளை
3. அ. இராசகாரியர்
4. இ. யா. சின்னத்தம்பு

4—3—1901.

---

உதயதாரகை.
௧௯௦௧ம் ௵ பங்குனி ௴ ௨௧௨.

## புதியவோர் நட்சத்திரம்.
### A New Star.

உத்தரகோளார்த்தத்தின் நட்சத்திரக் கூட்டங்களிலொன்றாகிய "பேஷியஸ்" என்னும் நட்சத்திர ராசியிலே, முதல்வகுப்பு நட்சத்திரங்களின் பிரபைகொண்டதாகியவோர் புதிய நட்சத்திரங் காணப்பட்டிருக்கின்றது. இது முதலாவதாய் மாசிமாதம் 24 ந் திகதி இலங்கையிலே திரிகோணமலையிலிருக்கும் சேனையுத்தியோகஸ்தரான கப்தின் மோலெஸவோத் என்பவராற் கவனிக்கப்பட்டது. ஐரோப்பா அமெரிக்காவிலுள்ளவர்களும் அந்நாட்களிலே அதைக் கவனித்தனராம். உத்தரகோளார்த்தத்திலுள்ள மற்றெந்த நட்சத்திரத்திலும்பார்க்க இதுவே அதி பிரபையானதாயிருந்தது. இப்போது பிரபையிற் சற்றே குறைந்து நான்காம் வகுப்பு நட்சத்திரம்போற் தோன்றுகின்றது. பொழுது அஸ்தமனமாயபின் வானத்தின் வடமேற்குத்திசையிலே ஆருமீன் அல்லது கார்த்திகை நட்சத்திரத்துக்கு வடக்கே "அல்கொல்", "கப்பெல்லா" என்னு மிருநட்சத்திரங்களையு மிணைக்கும் கோர்ரேகையில் இப்புதியநட்சத்திரம்யாருங்கவனிக்கக்கூடியதாயிருக்கின்றது.

ஆகாயத்திலே பிரபைகான்றுநமதுகண்ணுக்குத்தோற்றப்படும் நட்சத்திரங்களைவிட இருண்ட பிண்டங்களான பிரமாண்ட வஸ்துக்களுமனேகம் வானத்திலிருக்கின்றனவென்பது வானசாஸ்திரிகளின் அனுமானம். அவ்வகையான வஸ்துக்கள் தமது ஓட்டத்திற் சிலவேளை ஒன்றோடொன்று முட்டியுரைஞ்சுதலினால் அக்கினிபற்றும்போதே அவைகள் புதியநட்சத்திரங்களாய் நமக்குத் தோற்றுகின்றன. இப்போது காணப்பட்ட நட்சத்திரமும் அப்படிப்பட்டவொன்றாயிருத்தல் வேண்டும். ஆகாயத்திலேபரந்திருக்கும் "நெபுல்"கண்டங்கள்இறுகித்தடிக்கிறதினாலும் அக்கினிகோளமான புதியநட்சத்திரங்களுண்டாகின்றன. அப்படிஅக்கினிக்கோளங்களாகும் நட்சத்திரங்களின் ஒளி பூமியைச்சேர்ந்து நமதுகண்ணுக்குத்தோற்றவே சிலவேளை ஆயிரக்கணக்கான வருடங்கள் செல்லுகின்றன.

முற்காலத்திலே விசேஷம்பெற்ற மனிதர்கள் காலஞ்சென்றநாட்களிற் காணப்பட்ட புதியநட்சத்திரங்களுக்கு அம்மனிதரின்நாமங்களைக்கொடுப்பது வழக்கமாயிருந்தது. விசேஷமனிதர்களே செத்துஞ்சாகாதோராய் நட்சத்திரங்களாய் மாறி வானத்திற் சொலித்துக்கொண்டிருக்கின்றனரெனப் புலவர்களும் புகழ்ந்துகூறிவிட்டனர். பூமியின்மேற் சோதிப்பிரகாசமாய்விளங்கிய விக்தோறியாராணியார் காலஞ்சென்ற அந்நியநாட்களில் இந்த நட்சத்திரந் தோற்றியது நூதனமாயிருக்கின்றது. விக்தோரியா ராணி மரிக்கும்போது புதியநட்சத்திரமொன்று தோற்றுமெனச் சிலர் முந்தியே தீர்க்கதரிசனமுரைத்துமிருந்தனராம். புதிய நட்சத்திரத்தை முதன்முதற் கண்டுபிடித்தவராகிய கப்தின் மொலேஸ்வோதும் மற்றும் வானசாஸ்திரிகளும் அதற்கு விக்தோரியாவென நாமஞ்சூட்டுவாரென்பதற்கையமில்லை.

---

## இலங்கைக் குடிசனமதிப்பு.
### The Census Results.

1901 ம் ௵ பங்குனிமாதம் 1 ந் திகதி யெடுக்கப்பட்ட குடிசனமதிப்பின் சுருக்கவிபரம், குடிமதிப்புக்கம்மிஷனராகிய மெஸ். அருணாசலம்அவர்களால் 9 ந் திகதி வெளிப்படுத்தப்பட்டது. இலங்கையின் மாகாணங்களொவ்வொன்றிலும் யாழ்ப்பாணடிஸ்திறிக்கிலும் தற்போதிருக்குங்குடிசனத்தொகையையும், 1891 ம் ஆண்டிலிருந்த தொகையையும், அதிகரிப்புவீதத்தையும் அட்டவணைப்படுத்திக் கூறுகின்றோம்.

| | 1891 ல் எடுக்கப்பட்டதொகை | 1901 ல் எடுக்கப்பட்டதொகை | நூற்றுக்கு அதிகரிப்புவீதம் |
|---|---|---|---|
| இலங்கை | 3,012,224 | 3,596,170 | 19.4 |
| மேல்மாகாணம் | 764,828 | 924,349 | 20.9 |
| மத்தியமாகாணம் | 474,670 | 615,892 | 29.8 |
| தென்மாகாணம் | 490 074 | 567,961 | 15.9 |
| கிழமாகாணம் | 149,736 | 174,087 | 16.3 |
| வடமேல்மாகாணம் | 320,070 | 354,414 | 10.7 |
| வடமத்தியமாகா | 75,333 | 79,022 | 4.9 |
| ஊவாமாகாணம் | 159,201 | 188,964 | 18.7 |
| சப்பிரகாமமாகா | 258,626 | 351,235 | 35.8 |
| வடமாகாணம் | 319,686 | 340,247 | 6.4 |
| யாழ்ப்பாணம் | 279,636 | 300,774 | 7.6 |

ஆகவே இலங்கையின் தற்கால குடிசனத் தொகை ஏறக்குறைய 36 லட்சம். இது முந்தின குடிமதிப்பிலும்பார்க்க ஏறக்குறைய 6 லட்சம் கூடியிருக்கின்றது. வடமாகாணத்திலும் வடமத்தியமாகாணத்திலுமே குடிசன அதிகரிப்புவீதம் மிகக் குறைவாயிருக்கின்றது. மற்றும் மாகாணங்களிலே தேயிலை, கோப்பி, தென்னைத்தோட்ட முயற்சிகள், நயச்சுரங்க முயற்சிகள் நடைபெறுகின்றமையாற் கூலிச்சனங்கள் அதிகமாய்ச்சேர்ந்திருக்கின்றனர். இதுவே குடிசனம் அதிகரித்ததற்கு விசேஷகாரணமாயிற்று. இலங்கையிலிருக்கும் போவர்கைதிகள் மொத்தம் 4,735. இவர்களில் 4,400 பேர் ஊவாமாகாணத்திலும், 332 பேர் மேல்மாகாணத்திலும், 3 பேர் வடமாகாணத்திலு மிருக்கின்றார்கள். இலங்கையிலிருக்கும் சேனைத்தொகை 3358; இவர்களில் 1596 பேர் மேல்மாகாணத்திலும், 998 பேர் ஊவா மாகாணத்திலும், 592 பேர் கிழ்மாகாணத்திலும் 172 பேர் மத்தியமாகாணத்திலும் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

---

## தேசாதிபதியின் தரிசனை.
### The Governor's Visit.

இலங்கைத்தேசாதிபதி சேர் யோசேவ் உவெஸ்ற் றிட்கவே அவர்கள், சேனாபர்த்தர் மேஜர் ஜெனறல் டெசப்சன், கொலோனியல் சக்கிடுத்தார் மெஸ், தேயிலர், வைத்தியப்பகுதித்தலைவர் டக்தர் பெறி, மெய்காப்பாளர் சேர் பிறங் பேடெற், கப்தின் கூச் என்பவர்களோடு லேடிகோடன் புகைக்கப்பலில்வந்து சென்ற ஆறாந்திகதி சாயந்தரம் ஆறுமணிவரையில் யாழ்ப்பாணத்திலிறங்கினர். ஏசண்டர் மெஸ், ஈவேஷ் கப்பலுக்குச்சென்று தேசாதிபதியையும் மற்றோரையும் அழைத்துவர, துறைமுகத்திற் போடப்பட்டிருந்த பந்தரில் டிஸ்திறிக்நீதிபதி, பொலிஸ்நீதவான்மாராதியோர் காத்திருந்து மரியாதைசெய்தார்கள். தேசாதிபதியவர்களும் மற்றோரும் இவ்வுபசாரணையிற் திருத்திப்பட்டோராய் இராணிமாளிகைசென்று இராத் தங்கினர். தேசாதிபதியவர்கள் 7 ந் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிவரையில் யாழ்ப்பாணப் புகைவீதிஸ்தானத்தைத் தரிசிக்கும்படி சென்று அவ்விடத்துக் கட்டட ஒப்பந்தகாரனும், தெல்லிப்பழை உடையாருமாகிய மெஸ் பொன்னம்பலத்தாற் போடப்பட்ட பந்தரிற் தரித்து, வேலை நடத்தப்படுங் கட்டடங்களைப் பார்வையிட்டனர். வடமாகாணப் புகைவீதித் தலைமை இஞ்சினீர் மெஸ். ஒலிவியரும், யாழ்ப்பாண ஸ்தான இஞ்சினீர் மெஸ். பெல்லும் சமுகமாயிருந்து நடைபெறும்வேலைகளைக் காட்டினார்கள். அப்பால் தேசாதிபதியவர்களும்மற்றோரும் காங்கேசன்றுறைசென்று அங்கு நடக்கும்வேலைகளையும் பார்த்துப் பின் இராணிமாளிகைக்குத் திரும்பி வந்து சாப்பிட்டு இராத்தங்கினர். அடுத்தநாள் வெள்ளிக்கிழமை எட்டுமணிக்கு யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்பட்டுச் சாவகச்சேரிசென்று காலைச்சாப்பாடுண்டுபுகைவீதிவேலைகளைப்பார்த்துக்கொண்டு பழைசேர்ந்து அங்கு நடைபெறும் வேலைகளையுங் கவனித்து மத்தியரோட்மோர்க்கம் முல்லைத்தீவுப்பகுதிக்குச் சென்றனர். கிழ்மாகாண ஏசண்டர் மெஸ். மறேயும், திரிகோணமலை உபஏசண்டர் மெஸ். லஷிங்டனும், கொக்குளாயிற் காத்திருந்து தேசாதிபதியையும் மற்றோரையும் அழைத்துச் சென்றனர். தேசாதிபதியவர்கள் திரிகோணமலை கட்டுக்கழப்பு என்னுமிடங்களிற் தரிசித்துப் பின் கொழும்புசெல்வர்.

தேசாதிபதியவர்கள் யாழ்ப்பாணத்தையும், கிழ்மாகாணத்தையும், தரிசித்துச் செல்லும் நோக்கம் யாதென்பதைப்பற்றிப் பலரும் பலவிதமாய்க் கதைக்கின்றனராயினும் போவர்மறியற்காரரை வைத்துவதற்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திரிகோணமலை கட்டுக்கழப்பு என்னுமிடங்களிலெங்கேனும் வசதியுண்டோவெனப்பார்ப்பதே இச்சுற்றோட்டத்தின் விசேஷநோக்கம்போல விளங்குகின்றது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்றிருக்கும் புகைவீதிவேலையைப்பற்றிப்பொதுவாய்ச் சந்தோஷமடைந்தும், வேண்டியதளவுதெதியாய் வேலைநடத்தப்படவில்லையென வோரிடத்திற்கூறினராம். தேசாதிபதியின் வருகை, இவ்வேலை சற்றே கூடிய முயற்சியோடு நடைபெறுவதற்கேதுவாயிருக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்விரு காரியங்களுமே தேசாதிபதியின் வருகைக்கு விசேஷநோக்கங்களாயிருந்தனவாயினும், யாழ்ப்பாணத்திலே நகரசங்க ஸ்தாபனத்தைப்பற்றி நடைபெறும் அதிர்ச்சிகளையும் அவர் கவனித்து, அப்படியோர் ஸ்தாபனம் யாழ்ப்பாணத்துக்கவசியமோ அன்றோவென்பதைப்பற்றியுமுடிவுஞ்செய்துபோயிருப்பாரென நம்பலாம்.

---

## தென்ஆபிரிக்க யுத்தம்.
### South African War.

ஒறேஞ்சுநதிநாட்டின் தென்பாகத்திலே டிவெற்றின்சேனையிலிருந்து பிடிக்கப்பட்ட 175 கைதிகளும் 3000 குதிரைகளும் புளொம்பொன்தீன் நகருக்குக் கொண்டுபோகப்பட்டன. டிவெற்றும்அவரைச்சேர்ந்தோரும் ஒறேஞ்நாட்டிலே தமக்குப் பழக்கமான பகுதிகள் போய்ச்சேர்ந்துவிட்டனர் டிவெற் புளொம்பொன்தீனுக்கு மேற்கே நிற்க, மெஸ். ஹேர்ன் அவரைவிட்டுப்பிரிந்து கிழக்கே சென்றிருக்கின்றனர், இப்போது கிறீத்சிங்கர், ஷீப்பர் என்னுமிருவரின் கிழான போவர்கூட்டங்களே கேப்கலனியின் வடமேற்குப்பாகத்தில் நிற்கின்றன மலயில், கொறிங்கர்என்பவர்களின்கீழான அங்கிலோசேனைகள் அவர்களைத்தொடர்ந்துநிற்கின்றன. லோட் கிச்சினரும், ஜெனறல் போதாவும் சந்தித்துச்செய்த சம்பாஷணையின்முடிவு இன்னும்வெளியாகவில்லை. மெஸ். டிவெற் சம்மதியாவிட்டாலும் மெஸ். போதா ஒப்புக்கொடுக்கச் சித்தமாயிருக்கின்றனரெனப் பேச்சுநடக்கிறது. ஒப்புக்கொடுக்கும்படி மெஸ். போதாவுக்குப் புத்திகூறச்சென்ற அவரின்மனைவி பிறிற்றோறியாவுக்குசேர்ந்துவிட்டனர். தை, மாசியென்னுமிருமாதங்களில் போவர்சேனையில் மோசப்பட்டோர்தொகை 2000 வரையிலாம். மெஸ். குறூசருக்குப்பதிலாய் போவர்பிரசாதிபதியாயிருக்கும் மெஸ். சோக் பேக்கரும், இரண்டுமூன்றுமாய்ப் பிடிக்கப்படுவதிலும்பார்க்க முழுச்சேனையாய் ஒப்புக்கொடுத்துவிடுவதுபுத்தியெனப் போவர்சேனாபதிகளுக்குப் புத்திகூறியிருக்கின்றனர். டிவெற் கடைசியாய்க் கேப்கலனிக்குட் படையெடுத்துச்சென்றபோது இம்முறை நல் அனுகூலமுண்டாகாவிடின் ஒப்புக்கொடுத்தலைப்பற்றி யோசிக்கவேண்டியதாயிருக்குமெனத் தமது சேனாவீரர்க்குக் கூறியிருந்தனராம். மெஸ். ஸ்தீனைப் பிரித்தனுப்பியிருப்பது அந்தயோசனையிற்றான்போலும்.

## சீனயுத்தம்.
### China War.

மஞ்சூறியாவைப்பற்றிய விஷயத்திற் சீனர் இப்போது ருஷியருடன் ஏதாவது உடன்படிக்கைசெய்வது புத்தியல்லவென மற்றத் தத்துவஅரசினர் கூறியிருந்தனர். அப்படி ஏதும் உடன்பாடுசெய்தாற் தமக்கு

ம் அதற்குச் சரியான சலாக்கியங் கொடுக்கப்படவேண்டுமென யாப்பானியர் கூறினர். இவைகளைக் கேள்விப்பட்ட ருஷியர், கலகம் அமரும்மட்டும் புகைவீதிகளையும் வியாபாரத்தையுங் காவல்பண்ணுவதற்காகவே தாம் சில பொருத்தனைகள் செய்யப்போகிறதாய் வெளிப்படுத்தி, சீனர் முந்தியே சம்மதித்த காரியங்களுக்குக் கையொப்பமிடாவிடின் சேனுபலத்தால் நெருக்கிக் காரியம்பார்ப்போமென அறிவித்திருக்கின்றனர். பிறின்ஸ்ருவான் தங்பியூஷியாங் என்னுஞ் சீனச்சேனுபதிகள், தம்மைப்பிடிக்கவருவாரையெதிர்ப்பதற்கு ஙிங்சியாஎன்னுமிடத்தில் 30,000 சேனை ஆயத்தப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கின்றனராம். ஜேர்மனியசேனை ஒசுலிங் என்னும் மலைப்பாதையிலோர் சீனச்சேனையைச் சருவி நான்கு பொம்பொம் பீரங்கிகளைக் கைப்பற்றினர். சீனரில் 250 பேர் மாண்டார்கள். இப்பாதை சக்கிரவர்த்தியும் சக்கிரவர்த்தினியுமிருக்கும் ஷென்சிநாட்டுக்குப்போகும்வழியாம். சீனச்சக்கிரவர்த்தியின் தந்தையும், பீக்கின்பட்டினத்திலுள்ள சீனச்சேனையின் சேனுபதியுமான பிறின்ஸ சன், சீனர் தத்துவஅரசினரின் கேள்விக்கிசைந்திருக்கிறபடியால், தத்துவஅரசினர் தமதுசேனைகளை அகற்றல்வேண்டுமென்றும் அதன்பின்பே சக்கிரவர்த்தி பீக்கின்பட்டினத்துக்குவருவாரென்றுங் கூறுகின்றனர். லேகங்சாங் மறுபடியும் மிகக் கடுமையானநிலையில் வருத்தமாயிருக்கின்றனர்.

## யாழ்ப்பாணம்

காலநிலை.—Weather—மழை முற்றாய்வெளிப்பாக வெயில் அகோரமாய் விழுகின்றது. இரவிற் பனியதிகம். சென்ற கிழமையிற் றுறியமழை, எள்ளு, பயறு, குரக்கன் ஆகிய சிறுதானிய விதைப்புகளுக்கு மிக வாய்ப்பாய் முடிந்திருக்கின்றது.

சர்வகலாசாலைப் பரீட்சை.—University Ex.—கற்குத்தாச் சர்வகலாசாலையின் எவ்,எ, வீ,எ, பரீட்சைகள் பதினெட்டாந் திகதி தொடக்கம் சுண்டிக்குளியில் நடைபெறுகின்றன எவ் எ, பரீட்சையில் 21 பேர் சோதிக்கப்படுகிறனர். இவர்களில் 8 பேர் யாழ்ப்பாணக் கல்லூரியையும் 5 பேர் மத்திய கல்லூரியையும், 5 பேர் இந்துக்கல்லூரியையும் சேர்ந்தவர்கள் 3 பேர் உபாத்தியாயர்கள். வீ.எ பரீட்சையில் 5 பேர் பரீட்சிக்கப்படுகின்றனர், இவர்களில் 3 பேர் யாழ்ப்பாணக்கல்லூரியாணவர், எஞ்சிய இருவரும் உபாத்திமார்.

கள்வர்.—Thieves.—சென்ற வியாழக்கிழமையிரவு தட்டார்தெருவிற் கம்மாளரான கள்வர் மூவர் யாழ்ப்பாணவியாபாரசமுதாயத்தவர்களின் வங்குவீட்டின் மேற்கூரையைப் பிரித்து உள்ளேயிறங்கிப் பணங் களவாடப்பார்த்து காரியம்வாயாதது மாத்திரமல்லாமல் ஆட்களும் பிடிபட்டனராம்.

நகரசங்கம்.—Municipality.—யாழ்ப்பாணத்திலே நகரசங்கம் ஸ்தாபிக்கப்படுவது தகாதென்பதைப் பற்றிய பெருங் கூட்டங்கள் நடைபெறுகின்றன. சென்றமாதம் டிஸ்றிக்கோட்டுவீட்டிலே ஏசண்டர் அக்கிராசனபதியாயிருக்க நடைபெற்றகூட்டத்திலே நகரசங்கமேற்படுவது அவசியமெனத் தீர்மானஞ்செய்யப்பட்டது. அதற்குமாறாய் இந்தமாதம் 2 ந் திகதி வண்ணார்பண்ணையிலே அப்புக்காத்து தம்பையா அக்கிராசனபதியாயும் பிறக்டர் கதிரவேலுப்பிள்ளை இலிகிதராயுமிருக்க 2,000 க்கு மேற்பட்ட சுதேசிகள் கூடிய கூட்டத்திலே யாழ்ப்பாணத்திலே நகரசங்கமேற்படுத்த அவசியமில்லையென்றும், நகரசங்க வரிகளும் பிரமாணங்களும் சொரியிலுள்ள குடிசனங்களில் மிகுதியானோராகிய வறிஞர்களுக்கு மிகப் பாரமாயிருக்கும் என்றுந் தீர்மானிக்கப்பட்டது. இவ்விஷயத்தின்பேரில் தமிழர், சோனகரென்னுமிருபகுதியாருங் கையொப்பமிட்டுத் தேசாதிபதியவர்கட்குப் பெட்டிசங்களுமனுப்பியிருக்கின்றனர்.

ஆட்கள்.—Personal.—மாயாதிபக் காட்சி காட்டியபோது உண்டானதற்சம்பவத்தினூற் காயப்பட்டவராகிய கனம். வீற்ச் ஐயரவர்கள் இப்போது நல்லசுகமடைந்திருக்கிறாரெனச் சகோதரிச்னாகிய வீற்ச அம்மான்மார் அனுப்பியகாகிதத்திலிருந்து தெரியவாயிருக்கின்றது.

இலங்கை வித்தியாகர்த்தர் மெஸ். பரோஸ இரண்டோர்மாசங்களுக்கிடையில் யாழ்ப்பாணத்தைத் தரிசிக்க ஒழுங்குபண்ணியிருக்கின்றனர்.

தமிழர் பிரதிநிதியாகிய கௌரவ டக்தர் றெக்குவட் அடுத்தமாதத்தில் யாழ்ப்பாணத்தைத்தரிசித்துப்போகஎண்ணியிருக்கின்றனராம்.

யாழ்ப்பாண உதவிஏசண்டரான மெஸ். சார்பெரி இரண்டாம் சிவில்சேர்விஸ பரீட்சை கொடுத்தற்காய் வரும்மாதத்திற்கொழும்புசெல்ல இருக்கின்றனர்.

கொழும்புநகரக் கல்லூரித்தலைவரான மெஸ், சாமுவேல் வீ இரண்டோர்மாச லீவில் வடஇந்தியா சென்றிருக்கின்றனர்.

மத்தியஇந்தியாவில் அரசாட்சிஉத்தியோகத்திலிருந்தவராகிய மெஸ். டீ. சி அங்கிற்றெல் பம்பாய்ப்பகுதி நீதவான்மார்க்குரிய பரீட்சையிற் சித்தியாகி இரண்டாம் வகுப்பு நீதவான் உத்தியோகத்துக்கு உயர்த்தப்பட்டனரென அறிகின்றோம்.

ஊர்காவற்றுறைநீதவான் மெஸ. உலவுற்றேவ்ஸ் மற்றும் உத்தியோகஸ்தருடன் நெடுந்தீவிற் குற்றவிசாரணைநடத்தும்படி சென்றகிழமை போயிருக்கின்றனர்.

றங்கூன்பகுதியிலே உபாத்தியாயராயிருக்கும் மெஸ். எப்பிரேயீம் யோசேவ் இரண்டுமாத விடுதலைநாட்களைத் தமது பெற்றார் சகோதரருடன் கழிக்கும்படி யாழ்ப்பாணம்வந்திருக்கின்றனர்.

